# ஆர்டர் ஆஃப் தி ட்ரூக் கியால்போ (Order of the Druk Gyalpo) விருது பாரத பிரதமருக்கு வழங்கப்பட்டது

மார்ச் 22, 2024

திம்பு நகரில் உள்ள டெண்ட்ரெல்தாங்கில் நடைபெற்ற பொது நிகழ்ச்சியில், பூட்டானின் மிக உயரிய விருதான ஆர்டர் ஆஃப் தி ட்ருக் கியால்போ (Order of the Druk Gyalpo) விருதை பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு பூட்டான் மன்னர் வழங்கினார். இந்த மதிப்புமிக்க விருதைப் பெறும் முதல் வெளிநாட்டுத் தலைவர் பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆவார்.

2. 2021-ஆம் ஆண்டு டிசம்பரில் திம்புவில் உள்ள தஷிச்சோங்கில் நடைபெற்ற பூட்டானின் 114-வது தேசிய தின கொண்டாட்டங்களின் போது பூட்டான் மன்னர் இந்த விருதை பாரத பிரதமருக்கு அறிவித்திருந்தார். இந்தியா-பூட்டான் நட்புறவை வலுப்படுத்துவதில் பாரத பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களின் பங்களிப்பையும், மக்களை மையமாகக் கொண்ட தலைமையையும் அங்கீகரிக்கும் வகையில் இந்த விருது அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த விருது அவரது தலைமையின் கீழ் உலகளாவிய சக்தியாக வளர்ந்துள்ள இந்தியாவின் எழுச்சியைக் கௌரவிப்பதாகவும், இந்தியாவுடனான பூட்டானின் சிறப்பு பிணைப்பைக் கொண்டாடும் வகையில் அமைந்துள்ளது என்றும் விருதுடன் வழங்கப்பட்ட பாராட்டுப் பத்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

3. இந்த விருது இந்தியாவின் 1.4 பில்லியன் மக்களுக்கு அளிக்கப்பட்ட கௌரவம் என்றும், இரு நாடுகளுக்கும் இடையிலான தனித்துவமான உறவுகளுக்கு ஒரு சான்று என்றும் பிரதமர் கூறினார்.

4. தரவரிசை மற்றும் முன்னுரிமை அடிப்படையில், ஆர்டர் ஆஃப் தி ட்ரூக் கியால்போ (Order of the Druk Gyalpo) விருது, வாழ்நாள் சாதனைக்கான கௌரவ விருதாக அமைந்துள்ளது. பூட்டானின் உயரிய விருது இதுவாகும்.

**திம்பு**
**மார்ச் 22, 2024**